இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 07-12-2024

# நாடாளுமன்றம் எதற்கு?

பிரச்சினைகளை விவாதிக்கவே நாடாளுமன்றம் கூடுகிறது. பிரச்சினைகளை விவாதிக்க மறுக்கும் இடமாக நாடாளுமன்றம் இருக்குமானால் நாடாளுமன்றம் எதற்கு?

கடந்த நவம்பர் 25 ஆம் தேதியன்று நாடாளுமன்றக் குளிர்காலக் கூட்டத் தொடர் தொடங்கியது. அதானிக்கு பிடிவாரண்ட் பிறப்பிக்கப்பட்ட விவகாரம், மணிப்பூர் கலவரம், சம்பல் கலவரம் ஆகியவற்றை விவாதிக்க முதல் நாளில் இருந்து கோரிக்கை வைத்து வருகின்றன எதிர்க்கட்சிகள்.

அவைத்தலைவர் அனுமதிக்கவில்லை. எதிர்க்கட்சிகளின் தொடர் முழக்கத்தால் அவை நடவடிக்கைகள் முடங்கின. அவை நடவடிக்கைகள் முடங்கினாலும் பரவாயில்லை என்று பிரச்சினைகளை விவாதிக்க மறுக்கிறார் அவைத்தலைவர்.

**மணிப்பூர் கலவரம் குறித்து கூட அவையில் விவாதிக்க மறுப்பதில் என்ன நியாயம் இருக்க முடியும்? 2023 மே மாதத்தில் இருந்து கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 200 என அதிகாரப்பூர்வமாகச் சொல்லப்படுகிறது. ஆனால் 500 பேருக்கு மேல் இருக்கும் என்று சொல்கிறார்கள். ஒன்றரை ஆண்டுகளாக எரிகிறது மணிப்பூர். அங்கே ஒரே ஒருமுறை உள்துறை அமைச்சர் அமித்ஷா போய்விட்டு வந்தார். ஒரு முறை கூட பிரதமர் போகவில்லை. மணிப்பூரை ஆளும் பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்களே, அந்த மாநில அரசை விமர்சிக்கிறார்கள். கூட்டணிக் கட்சிகள் தங்கள் ஆதரவை வாபஸ் வாங்கி விட்டன. இப்படி ஒரு கேவலமான ஆட்சியை மணிப்பூருக்குக் கொடுத்து வருகிறது பா.ஜ.க.. ஆனால் அதனைப் பற்றி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பி விவாதிக்கும் வாய்ப்பை கூட பா.ஜ.க. தரமறுக்கிறது.**

அதானி விவகாரத்தில் விவாதம் நடத்த மறுக்கிறது ஒன்றிய பா.ஜ.க. தரப்பு. அதானி மீது அமெரிக்க நீதித்துறை கடுமையான குற்றச்சாட்டுகளை வைத்துள்ளது. அமெரிக்காவின் பாதுகாப்பு, அயலுறவு, ஊழல் தடுப்பு சட்டங்களை மீறி ரூ.6,300 கோடி அளவுக்கு மோசடிகள் செய்யப்பட்டதாகவும், அதற்காக இந்திய அதிகாரிகளுக்கு 2,029 கோடி ரூபாய் அளவுக்கு லஞ்சம் கொடுத்திருப்பதாகவும் அமெரிக்க நீதிமன்றம் சொல்லி இருக்கிறது. முதலீடுகளைத் திரட்டுவதற்காக லஞ்சம் தரப்பட்டதாகவும் சொல்லப்பட்டுள்ளது. பிடிவாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ளது அதானிக்கு. இக்குற்றச்சாட்டுகள் அனைத்தையும் அதானி குழுமம் மறுத்துள்ளது. அதானி விவகாரம் என்பது தனிப்பட்ட ஒரு தொழிலதிபரின், தொழில் நிறுவனத்தின் விவகாரம் அல்ல. அதானியின் வளர்ச்சி என்பது மோடியின் அரசியல் வளர்ச்சியோடு தொடர்புடையதாக இருக்கிறது என்பதை அனைவரும் அறிவார்கள். எனவே, அதானி விவகாரத்தை இந்திய நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரிக்கை வைப்பதில் நியாயம் இருக்கிறது.

**அதானி விவகாரத்தில் நாடாளுமன்றக் கூட்டுக்குழு விசாரணை கோருகின்றன எதிர்க்கட்சிகள். அந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்க மறுக்கிறது ஆளும் தரப்பு. நாடாளுமன்ற வளாகத்தில் தொடர்ந்து எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றன. நாடாளுமன்றத்தின் வாயில் படிக்கட்டுகளில் நின்று போராட்டத்தில் ஈடுபடும் எதிர்க்கட்சி எம்.பி.களுக்கு சபாநாயகர் ஓம் பிர்லா கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்துக்கு உள்ளே பேச அனுமதி மறுக்கப்படும் போது, வெளியே போராடும் அவசியம் ஏற்படத்தான் செய்யும்.**

“அதானி தொடர்புடையவர்கள் மீது அமெரிக்காவில் நடைபெற்று வரும் ஊழல் விசாரணையில் இந்தியாவுக்கு பங்கில்லை” என்று ஒன்றிய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரண்தீர் ஜெய்ஸ்வால் சொல்லி இருக்கிறார். இவ்வளவு பெரிய விவகாரம் குறித்து, பிரதமரோ, உள்துறை அமைச்சரோ, வெளியுறவுத் துறை அமைச்சரோ பதில் அளித்திருக்க வேண்டாமா? அதுவும் நாடாளுமன்றத்தில் பதில் அளித்திருக்க வேண்டாமா?

இது தொடர்பாக முகநூலில் பதிவிட்ட ராகுல்காந்தி, **“அதானியால் பலனடைந்தது யார்? பிரதமர் மோடியா என்ற உண்மையான கேள்வி நாடாளுமன்ற மகர வாயிலில் எழுப்பப்பட்டுள்ளது. பிரதமரின் அமைதி பல விஷயங்களை உரக்கப் பேசுகிறது”** என்று குறிப்பிட்டு இருக்கிறார். பேச மறுப்பதன், பதில் சொல்ல மறுப்பதுதான் மர்மங்களை அதிகப்படுத்துகிறது.

இந்திய - சீன உறவுகள் தொடர்பாக வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், நாடாளுமன்ற மாநிலங்களவையில் உரையாற்றினார். இந்த உரை மீது விளக்கம் கேட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கேள்வி கேட்க முயன்றார்கள். அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

மாநிலங்கள் அவையில் விவசாயிகள் பிரச்சினை குறித்து விவாதிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட ஒத்திவைப்பு நோட்டீஸை அவைத்தலைவர் தன்கர் நிராகரித்தார். ‘வெற்று முழக்கங்கள் எழுப்புவதாலும், முதலைக் கண்ணீர் வடிப்பதாலும் விவசாயிகளுக்குச் சேவையாற்ற முடியாது’ என்று ஊருக்கு அறிவுரை சொல்லி இருக்கிறார். ‘நீங்கள் அரசியலாக்குகிறீர்கள்’ என்று எதிர்க்கட்சிகளைக் குற்றம் சாட்டி இருக்கிறார். பிரச்சினைகளுக்குப் பதில் சொல்லி விட்டால், எதற்காக இதை திரும்பத் திரும்ப கேட்கப் போகிறார்கள்?

மாநிலங்களவையில் கடந்த 3 ஆம் தேதியன்று அவை கூடியதும் விதி எண் 267 இன் கீழ் பல்வேறு விவகாரங்கள் குறித்து விவாதம் கோரி 42 நோட்டீஸ்கள் அவைத்தலைவர் தன்கர் முன் கொடுக்கப்பட்டன. 42 நோட்டீஸ் களையும் தன்கர், நிராகரித்தார். ‘அவை அலுவல்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் ஆயுதமாக இந்த நோட்டீஸ்களை பயன்படுத்தக் கூடாது’ என்று தன்கர் சொல்லி இருக்கிறார். அவையை மட்டுமல்ல; நாட்டையும் அமைதியாக நடத்தவே இதுபோன்ற நோட்டீஸ்கள் தரப்படுகின்றன என்பதை மாண்புமிகு துணை குடியரசுத் தலைவர் தன்கர் உணர வேண்டும்.

**‘கடந்த 25 ஆண்டுகளில் இவ்வளவு அதிகமான நோட்டீஸ்கள் தரப்பட்டது இதுவே முதல் முறை’ என்று தன்கர் சொல்லி இருக்கிறார். இதில் இருந்து என்ன தெரிகிறது? கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் இப்போதுதான் ‘கலவர’ காலமாக இருக்கிறது என்பதைச் சொல்வதற்கு வேறு எடுத்துக்காட்டு ஏதும் வேண்டுமா?**

---

### எல்.முருகன் பேச்சு மீதான வழக்கில்

# ‘முரசொலி’ நிலைப்பாடு பெருந்தன்மையானது!

## வழக்கை முடித்து வைத்து உச்சநீதிமன்றம் பாராட்டு!

**புதுடெல்லி, டிச. 7-**

**முரசொலி நிலம் குறித்து பா.ஜ.க. மூத்த தலைவர் தற்போது ஒன்றிய அரசில் அமைச்சராக இருக்கும் எல்.முருகன் பேசியதற்கு முரசொலி அறக்கட்டளை சார்பில் ஆர்.எஸ்.பாரதி தொடர்ந்த வழக்கில், எல்.முருகன் சார்பில் தாம் கெட்ட எண்ணத்தில் பேசவில்லை என நீதிமன்றத்தில் தெரிவித்ததால் வழக்கை முடித்து வைக்கலாம் என முரசொலி அறக்கட்டளை சார்பில் உச்சநீதி மன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து ‘முரசொலியின் நிலைப்பாடு பெருந்தன்மையானது’ எனக் கூறி இந்த வழக்கை முடித்து வைத்து உச்ச நீதிமன்றம் முரசொலி அறக்கட்டளையை பாராட்டியுள்ளது.**

முரசொலி நிலத்திற்கான மூலப்பத்திரம் எங்கே? என்று பா.ஜ.க. மூத்த தலைவர் எல்.முருகன் பேசியதற்கு முரசொலி அறக்கட்டளை சார்பாக ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி அவதூறு வழக்கினை சென்னை மெட்ரோ பாலிடன் மாஜிஸ்திரேட்டில் தொடர்ந்தார்.

அதை எதிர்த்து எல்.முருகன் உயர்நீதி மன்றத்தில் தொடுத்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

அந்த உத்தரவினை எதிர்த்தும், தன்மீது உள்ள வழக்கை ரத்து செய்யக் கோரியும் உச்ச நீதிமன்றத்தில் எல்.முருகன் வழக்குத் தொடர்ந்தார்.

அந்த வழக்கு நேற்று முன்தினம் (5.12.2024) உச்சநீதிமன்றத்தில் மாண்புமிகு நீதிபதிகள் பி.ஆர்.கவாய் மற்றும் கே.வி. விஸ்வநாதன் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது எல்.முருகன் தரப்பில் முரசொலி மீது அவதூறு கற்பிக்க வேண்டும் என்ற எண்ணம் தனக்கு இல்லை என்றும், எந்த ஒரு கெட்ட உள்நோக்கத்துடனும் அந்தக் கருத்தைச் சொல்லவில்லை என்றும், அரசியல் ரீதியாக பதியப்பட்ட கருத்து என்றும் சொல்லப்பட்டது.

தனக்கு கெட்ட எண்ணம் இல்லை என்ற கருத்தை எல்.முருகன் சொன்னதால் அந்த வழக்கை முடித்து வைக்கலாம் என்று முரசொலி அறக்கட்டளை தரப்பில் மூத்த வழக்கறிஞர்கள் சித்தார்த் லூதுரா மற்றும் என்.ஆர்.இளங்கோ ஆகியோர் கூறியதன் அடிப்படையில் முரசொலி அறக்கட்டளையின் அறங்காவலராக ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி எடுத்த இந்த நிலைப்பாடு பெருந்தன்மையானது என்று பதிவு செய்து உச்சநீதிமன்றம் பாராட்டி வழக்கை முடித்து வைத்தது.

---

### செமிகண்டக்டர் தயாரிக்கும் புத்தாக்க நிறுவனங்களுக்கும்,

# ஆராய்ச்சியாளர்களுக்கும் ஒன்றிய அரசிடம் ஏதேனும் சலுகை திட்டங்கள் உள்ளனவா?

## மக்களவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, டிச. 7-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர், திரு. எஸ். ஜெகத்ரட்சகன் 04 டிசம்பர் 2024 அன்று மக்களவையில், மின்னணு மற்றும் கணிணித்துறை வளர்ச்சிக்கு பெரிதும் பயன்படக்கூடிய செமிகண்டக்டர் தயாரிக்கும் புத்தாக்க நிறுவனங் களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் பெரிதும் உதவி செய்யும் வகையில், ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளவா? என்றும் அதற்கான சலுகைகள் ஏதேனும் அளிக்கப்பட்டுள்ளனவா? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் மின்னணு மற்றும் கணிணித் துறை இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

**ஒன்றிய அரசின் மின்னணு மற்றும் கணினித்துறை இணையமைச்சர் அளித்த பதில் :**

செமிகண்டக்டர் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள புத்தாக்க நிறுவனங்களையும், ஆராய்ச்சியாளர்களையும் ஊக்கப்படுத்தும் வகையில், ஒன்றிய அரசின் மி;ன்னணு மற்றும் கணிணித் தொழில்நுட்பத் துறை பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது என்றும், தனியார் ஆராய்ச்சி நிறுவனங்



களுக்கு நிதியுதவி அளித்தல், செமிகண்டக்டர் வடிவமைப்பில் உதவி செய்தல், திறன் மேம்பாட்டிற்கான பயிற்சி அளித்தல் என ஒன்றிய அரசு உதவி செய்து வருகிறது என்று இணையமைச்சர் தெரிவித்தார்.

மேலும், 2022 ஆண்டு முதல் 2027 வரையில், 113க்கும் அதிகமான ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும், புத்தாக்க நிறுவனங்களுக்கும், செமிகண்டக்டர் தயாரிப்பில் உதவி செய்திட, ரூபாய் 250 கோடிகள் அளவிற்கு நிதியுதவி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது என்றும்,

இத்திட்டத்தின் மூலம், பொறியியலில் பட்டம் பெற்றுள்ள 85000 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு செமிகண்டக்டர் துறையில் கிடைத்திடும் என்றும், இதனால் பெருமளவு ஆராய்ச்சியும் மேம்படுத்தப்படும் என்று கூறினார்.

செமிகண்டக்டர் வடிவமைப்பு துறையில் ஆராய்ச்சியை மேம்படுத்துவதன் மூலம், இந்தியாவிலேயே தயாரிக்கும் காது கேளாதேவர்க்கு உரிய கருவிகளும் தயாரிக்கப்படும் என்றும், ரூபாய் 76,000 கோடிகள் அளவிற்கு நிதி உதவி செய்வதன் மூலம் செமிகண்டக்டர் துறையின் வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சிகள் முன்னெடுத்து செல்லப்படுவதுடன், 42 வடிவமைப்பு கம்பெனிகளும், 15 செமி கண்டக்டர் நிறுவனங்க ளுக்கு நிதியுதவி அளிக்கவும் ஒன்றிய அரசின், மின்னணு மற்றும் கணிணித் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது என்று, ஒன்றிய அரசின் மின்னணு மற்றும் கணிணித்துறை இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா அவர்கள், மக்களவையில் அரக்கோணம் திமுக நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

---

### ஒன்றிய அரசின் அதிகார வரம்பு மாநில அரசுகளின் அதிகாரத்தை புறந்தள்ளுவது

# ஜனநாயகத்தின் முதுகெலும்பான கூட்டாட்சித் தத்துவத்தை பலவீனப்படுத்தும்!

## மாநிலங்களவையில் அந்தியூர் செல்வராசு பேச்சு!

புதுடெல்லி, டிச. 7 -

ஒன்றிய அரசின் அதிகார வரம்பு மாநில அரசுகளின் அதிகாரத்தை புறந்தள்ளுவது ஜனநாயகத்தின் முதுகெலும்பான கூட்டாட்சித் தத்துவத்தை பலவீனப்படுத்தும் என கொதிகலன்கள் ஒருங்குமுறைப்படுத்தல் விவாதத்தின்போது மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் செல்வராசு வினா எழுப்பினார்.

அவர் பேசியது வருமாறு:

கொதிகலன்களை ஒழுங்குமுறைப்படுத்தல் மசோதாவை எதிர்த்து என் கருத்துக்களை பதிவு செய்ய விரும்புகிறேன். இந்த மசோதா பாதுகாப்பு மற்றும் செயல்திறனில் கவனம் செலுத்துகிறது. ஆனால் அதே வேளையில், மாநிலங்களின் சுயாட்சியையும் கூட்டாட்சி கொள்கைகளையும் குறைத்து மதிப்பிடுகிறது. நமது அரசமைப்புச்சட்டம் இணக்கமான கூட்டாட்சி கொள்கையை அங்கீகரிக்கிறது என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் அவர்கள், அரசமைப்புச் சட்டத்ததை உருவாக்கும் போது “கூட்டாட்சி கொள்கையின் அடிப்படை தத்துவம் என்னவென்றால் சட்டமியற்றல் மற்றும் நிர்வாக அதிகாரங்கள், மாநிலங்கள் மற்றும் மத்திய அரசுக்கு இடையில் பகிரப்பட்டுள்ளன என்று, கூறினார். ஆனால் எந்தப் பகுதிகளில் மாநிலங்களுக்கு நிபுணத்துவமும் அதிகார வரம்பும் இருக்கிறதோ, அவற்றை ஒன்றிய அரசு மதிப்பதே இல்லை. ஒட்டுமொத்த அதிகாரத்தையும் தன் கையில் எடுத்துக் கொள்ள விரும்பு கிறது. இது ஏற்புடையதல்ல.

இந்த மசோதா கொதிகலன்களின் பாதுகாப்பு மற்றும் ஆய்வு நடவடிக்கைகளை மேம்படுத்துவதே நோக்கம் என்று கூறுகிறது. இந்த நோக்கம் சரியானதாகவே இருந்தாலும், இதை நடைமுறைப்படுத்துவதில் மாநில அரசுகளின் பங்கு குறைக்கப்பட்டுள்ளது.

கொதிகலன்களை ஒழுங்கு முறைப்படுத்தல், அரசமைப்புச்சட்டத்தின் பொது பட்டியலின் கீழ் வருகிறது.

**வலுவான கட்டமைப்பு தமிழ்நாட்டில் உள்ளது!**

பொதுபட்டியலின் கீழ் இருக்கும் துறைகளுக்கு ஒன்றிய அரசிற்கும் மாநில அரசிற்கும் சம அளவிலான அதிகாரம் பகிரப்பட்டுள்ளது. வரலாற்று ரீதியாக பார்க்கையில் கொதிகலன்களின் பாதுகாப்பிற்கான விதிகளை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு முக்கிய பங்காற்றியுள்ளது. தமிழ்நாட்டின் ஜவுளித்துறை மற்றும் உற்பத்தித் துறைகளில் பயன்படுத்தப்படும் கொதிகலன்களை ஒழுங்குபடுத்துவதற்கு வலுவான கட்டமைப்பு தமிழ்நாட்டில் உள்ளது.

**ஒன்றிய அரசின் பிற்போக்குத்தனம்!**

இந்த மசோதா, வழிகாட்டுதல்களை அமைக்கும் அதிகாரம், உரிமம் வழங்கும் வழிமுறைகளை அமல்படுத்துதல், மற்றும் ஆய்வுகளை மேற்பார்வையிடுதல் உள்ளிட்ட அதிகாரங்களை மத்திய அரசுக்கு வழங்குகிறது. ஒரு நெறிப்படுத்தப்பட்ட மற்றும் திறமையான அமைப்பை உருவாக்குவதே அரசின் நோக்கம் என்றாலும், இதை நடைமுறைப்படுத்தும்



போது மாநிலங்கள் தங்கள் சுயாட்சிகளை இழக்க நேரிடும்.

மாநிலங்களின் சுயாட்சி என்பது நிர்வாகப் பிரச்சினை மட்டுமல்ல. மாநிலங்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டால் அவர்கள் புத்தாக்கம் உடைய பல்வேறு திட்டங்களை கொண்டுவருவார்கள். உள்ளூர் நிபுணத்துவத்தை புறந்தள்ளி, எல்லா முடிவுகளையும் ஒன்றிய அரசே எடுப்பது முன்னேற்றம் அல்ல. பிற்போக்குத்தனம். எந்தெந்த துறைகளில் மாநில அரசுகளுக்கு நிபுணத்துவம் உள்ளதோ அந்தந்தத் துறைகளில் அவர்களுக்கு ஆதரவை மத்திய அரசு வழங்க வேண்டும்.

ஒரே அளவு எல்லோருக்கும் பொருந்தும் என்ற நடைமுறையை ஒன்றிய அரசு தற்போது திணிக்கிறது. இந்த அணுகுமுறை புத்தாக்க சிந்தனையின் கழுத்தை நெறிக்கக் கூடும். தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு தொழிற்சாலைகளை மாநில அரசு வழிகாட்டிய ஒழுங்குமுறைகளின்படி செயல்பட்டு வருகின்றன. இப்போது இந்த புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டால், அவற்றிற்கு கூடுதல் செலவும் தளவாட சிக்கல்களும் ஏற்படும்.

இந்தத் துறையில் மட்டுமல்ல, நீட் தேர்வு, ஜி.எஸ்.டி., சுற்றுச்சூழல் ஒழுங்குமுறை சட்டங்கள், விவசாயச் சட்டங்கள், தொழிலாளர் சட்டங்கள் என்று ஒன்றிய அரசின் அதிகார வரம்பு மாநில அரசுகளின் அதிகாரத்தை புறந்தள்ளியே சென்று கொண்டிருக்கிறது. இது நமது ஜனநாயகத்தின் முதுகெலும்பான கூட்டுற வான கூட்டாட்சி தத்துவத்தை பலவீனப்படுத்தும்.

மேலும் இந்த மசோதா மாநிலங்களின் நிதிச் சுமையை அதிகரிக்கிறது. ஆய்வு அமைப்புகளை தரம் உயர்த்துதல், பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல், ஒன்றிய அரசு வெளியிட்ட வழிகாட்டுதல்களை நிறைவேற்றுதல் போன்றவற்றிற்கு கணிசமாக நிதி செலவிட வேண்டும். ஒன்றிய அரசு போதிய நிதி ஒதுக்காத பட்சத்தில், இந்த தேவைகளை சமாளிக்க மாநிலங்கள் போராட வேண்டியிருக்கும்.

**தொழிலாளர்களை பாதிக்கும் கொள்கை!**

அதிகாரங்களை மத்தியில் குவித்தல் மட்டுமே எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வு என்று ஒன்றிய அரசு நினைக்கக்கூடாது. இந்த மசோதா சில மாநிலங்களுக்கு பலன் அளிக்கலாம், ஆனால் எல்லா மாநிலங்களுக்கும் பலன் அளிக்க முடியாது. ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் தனித்துவமான தேவைகள் உள்ளன. இந்த மசோதாவை வரையறுப்பதற்கு முன்பு, மாநில அரசுகளுடனும் சம்மந்தப்பட்ட தொழில்துறையினருடனும் ஒன்றிய அரசு கலந்து ஆலோசித்திருக்க வேண்டும். நாடு முழுவதும் உள்ள இலட்சக்கணக்கான தொழிலாளர்களையும், தொழிற்சாலைகளையும் பாதிக்கும் கொள்கை முடிவுகளை எடுக்கும்போது, அரசு வெளிப்படைத்தன்மையுடனும் உள்ளீட்டு தன்மையுடனும் செயல்பட வேண்டும்.

இறுதியாக, எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களின் வார்த்தைகளை நினைவு கூர விரும்புகிறேன். ஒன்றிய அரசு மத்தியஸ்தராக இருக்க வேண்டுமே தவிர, மாநில அரசுகளின் எஜமானராக இருக்கக்கூடாது. ஒற்றுமை என்பது ஒரே தன்மையை திணிப்பதல்ல. வேற்றுமையை அங்கீகரிப்பதே, என்ற அவரது வார்த்தைகளுடன் என் உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

---




சட்டமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 68ஆம் ஆண்டு நினைவு நாளில் விழுப்புரம் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி தலைமையில், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ் முன்னிலை வகித்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ.சிவா, டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணைச் தயா இளந்திரையன், நகரச் செயலாளர் இரா.சக்கரை, பொதுக்குழு பஞ்சநாதன், நகர மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, துணை தலைவர் சித்திக் அலி உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.